3. விதி 110–ன்கீழ் அறிக்கை

பண்ணைசாரா கூட்டுறவுக் கடன் புதிய சிறப்புத் தீர்வுத் திட்டம்– வட்டி குறைப்பு, அபராத வட்டி மற்றும் இதர செலவுத் தொகை தள்ளுபடி குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் பின்வரும் அறிக்கையினை அவைமுன் வைக்கின்றேன்:*

கழக அரசு பொறுப்பேற்ற 13–5–2006 அன்றே விவசாயிகளின் துயர் துடைக்க ரூபாய் 7,000 கோடி அளவிற்கான விவசாயக் கூட்டுறவுக் கடன்களை இரத்துச் செய்து ஆணையிடப்பட்டது. ஆனால், விவசாயம் சாராத தொழில்களுக்குக் கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்பட்ட கடன்கள் தொழிற்கடன்கள் என்பதால், அவை இரத்துச் செய்யப்படவில்லை. இவ்வாறு தொழில் சார்ந்த பண்ணைசாராக் கடன்களையும், தள்ளுபடி செய்ய கோரிக்கை எழுப்பப்பட்டது. இத்தகைய கடன்கள், விசைத்தறி, போக்குவரத்து வாகனங்கள், செங்கல் சூளை போன்ற தொழில்களுக்காக கடனாகக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்டவை. இக்கடன்களின்மீது, அவை வழங்கப்பட்ட காலத்தில் நடைமுறையில் இருந்த அதிக வங்கி வட்டி வீதத்தையொட்டி 18 விழுக்காடு வரை கூட்டு வட்டி வசூலிக்கப்பட்டது. மேலும், தவணை தவறிய தொகைக்கு 3 விழுக்காடு அபராத வட்டியும் வசூலிக்கப்பட்டது. இவை சொத்து அடமானத்தின் அடிப்படையில் தொழில் செய்வதற்காகப் பெறப்பட்ட கடன் என்பதால், முழுவதும் தள்ளுபடி செய்ய இயலாது என்ற நிலையில், கடன்பெற்றோர் தொடர்ந்து தொழில் செய்திட ஏதுவாகப் புதிய திட்டம் ஒன்று 27–12–2006 அன்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, கடனை உடனடியாகச் செலுத்த முன்வருபவர்களுக்கு அத்தகைய கடன்கள்மீதான கூட்டு வட்டி 18 சதவீதம் வரை இருந்ததை மாற்றி, 31–3–2001 முதலாக 12 சதவீத சாதாரண வட்டி செலுத்தலாம் எனக் குறைக்கப்பட்டது. மேலும், அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தச் சலுகைத் திட்டம் 30–6–2009 வரை நடைமுறையில் செயல்படுத்தப்பட்டது.

2009 ஜூலை 7] [பேராசிரியர் க. அன்பழகன்]

இந்தச் சலுகைத் திட்டத்தின்கீழ் 31–3–2009 வரை ரூபாய் 509.99 கோடி கடன் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் கடன் பெற்றவர்கள் ரூபாய் 127.93 கோடி அளவுக்குச் சலுகை பெற்றுள்ளனர். 31–3–2009 நிலவரப்படி இன்னமும் ரூபாய் 709.51 கோடி மொத்த கடன் பாக்கி நிலுவையில் உள்ளது.

முற்பகல் 9–35

இந்நிலையில், இத்தகைய பண்ணைசாராக் கடன்மீதான வட்டியையாவது தள்ளுபடி செய்து, கடனைத் திருப்பிச் செலுத்த உதவிட வேண்டுமென்ற கோரிக்கைகள் பல்வேறு தரப்பிலிருந்தும் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. எனவே, அதிக எண்ணிக்கையிலானோர் இத்திட்டத்தைப் பயன்படுத்தி கடன் தீர்வு செய்துகொள்ள வழிவகுத்தால் கூட்டுறவு வங்கிகளும், கடன் பெற்றவர்களும் பயன்பெறுவர் என்பதால், இந்த வட்டிக் குறைப்புத் திட்டத்தின்மூலம் மேலும் சலுகைகளை அளிக்க அரசு முடிவு செய்து, ஒரு சிறப்பு கடன் தீர்வுத் திட்டத்தைப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்த முடிவெடுத்துள்ளது:

புதிய சிறப்பு கடன் தீர்வுத் திட்டத்தின்படி இது 31–3–2007–க்குள் இறுதித் தவணை செலுத்த வேண்டியிருந்து, அதைக் கட்டத் தவறிய பண்ணை சாராக் கூட்டுறவுக் கடனுக்கு மட்டுமே பொருந்தும்.

கடனைத் திரும்பச் செலுத்த முன்வருபவர்களுக்குத் தற்போது வசூலிக்கப்படும் 12% சாதாரண வட்டிக்குப் பதிலாக, வங்கியில் கடன் பெற்ற தேதியிலிருந்தே 6 விழுக்காடு சாதாரண வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். அபராத வட்டியும், இதர செலவுத் தொகையும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின்படி 31–10–2009 நாளுக்குள் வங்கியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவும், அதன்படி கடன் முழுவதும் திரும்பச் செலுத்த, ஒப்பந்தம் போடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலம் வரையில் மட்டுமே அனுமதிக்கப்படும். ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டு 25 விழுக்காடு தொகையை உடனடியாகச் செலுத்தி, மீதி 75 விழுக்காடு தொகையை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட மூன்று மாதத்திற்குள்ளாக ஒரு தவணையாகவோ, ஒன்றுக்கும் மேற்பட்டால் மூன்று தவணையாகவோ திரும்பச் செலுத்த வேண்டும்.

இந்தப் புதிய வட்டிச் சலுகைத் திட்டத்தின்மூலம் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் வட்டி இழப்பில், 4 சதவீதத் தொகையை மாநில அரசே ஈடு செய்யும்; மீதித் தொகையை அந்த வங்கிகளே ஏற்கும்.

இந்தப் புதிய சிறப்புக் கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் வட்டிக் குறைப்புமூலம் உத்தேசமாக ரூபாய் 144.62 கோடியும், அபராத வட்டித் தள்ளுபடி மூலம் ரூபாய் 101.98 கோடியும், இதர செலவுத் தள்ளுபடி மூலம் ரூபாய் 4.61 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 251.21 கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்வதால் அதன்மூலம் ஒரு இலட்சத்து முப்பத்துரெண்டாயிரம் பேர் பயனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு திருமதி டி. யசோதா அவர்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 157–வது முதல் 161–வது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. கி. ஆறுமுகம் அவர்கள்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 123 மற்றும் 124 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.